# தேர்தல் விஞ்ஞாபனக் கண்காணிப்பின் தொகுப்பு – 2025

**பஃவ்ரல் மற்றும் மார்ச் 12 இயக்கம் ஆகியவற்றினால் மேற்கொள்ளப்பட்ட அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபன நடைமுறைப்படுத்தல் பற்றிய கண்காணிப்பு**

## நிறைவேற்றுச் சுருக்கம்

ப.ஃவ்ரல் (PAFFREL) அமைப்பு, மார்ச் 12 இயக்கத்துடன் (M12M) இணைந்து வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் பெறுபேறுகளை அடிப்படையாகக்கொண்ட ஆளுகை என்பவற்றை ஊக்குவிப்பதற்காக, அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தை சுயாதீனமாகக் கண்காணிக்கும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது. 2024 ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களைத் தொடர்ந்து, இந்த முன்முயற்சியானது அரசாங்கத்தின் பதவிக்காலத்தின் முதல் ஆறு மாதங்களில் அதன் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் அரசாங்கத்தின் செயற்பாடுகள் எவ்வாறான ஒத்திசைவைக் கொண்டுள்ளன என்பதை மதிப்பீடு செய்தது. இந்தக் கண்காணிப்பானது, கொள்கைகள், அளவுகோல்கள் மற்றும் எடுகோள்கள்களை உள்ளடக்கிய ஒரு கட்டமைக்கப்பட்ட சட்டகத்தைப் பயன்படுத்தி அமைச்சரவைத் தீர்மானங்கள், 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டம், நிறைவேற்றுத்துறைப் பணிப்புரைகள் மற்றும் பாராளுமன்றச் செயல்நடவடிக்கைகள் மீது கவனம் செலுத்தியது. அரசாங்கம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை ஒரு வழிகாட்டும் “தேசிய கொள்கைச் சட்டகம்” என முறையாக ஏற்றுக்கொண்டுள்ளதுடன், அதனை நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிப்பதற்கு உள்ளகப் பொறிமுறைகளையும் நிறுவியுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. சீர்திருத்தங்களை ஆரம்பிப்பதிலும், வரவுசெலவுத்திட்டங்களைத் தேர்தல் விஞ்ஞாபனம் சார்ந்த முன்னுரிமைகளுடன் ஒருங்கிணைப்பதிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ள போதிலும், பகுதியளவிலான அறிக்கையிடல் மற்றும் நிறுவன ரீதியான பிளவுநிலை (institutional fragmentation) காரணமாக கொள்கை நோக்கங்களை, அளவிடத்தக்க பெறுபேறுகளாக மாற்றுவதில் சீரற்ற நிலையே காணப்படுகின்றது. இந்த சுயாதீன கண்காணிப்பு நடவடிக்கையானது வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் செயற்திறன்மிக்க பொது நிருவாகக் கலாசாரத்தை வளர்ப்பதன்மூலம் ஜனநாயக ஆட்சிமுறைக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்குகின்றது. தேர்தல் உறுதிமொழிகள் நடைமுறைசார் பெறுபேறுகளாக மாற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும், தொடர்ச்சியான பொதுமக்களின் மேற்பார்வையைப் பேணுவதற்கும் ப.ஃவ்ரல் அமைப்பும், மார்ச் 12 இயக்கமும் தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றன.

## 1. அறிமுகம்


தேர்தல் விஞ்ஞாபனங்கள், அரசியல் செயலாற்றுனர்களுக்கும் பிரஜைகளுக்கும் இடையிலான ஒரு “ஜனநாயக உடன்படிக்கை” (Democratic Covenant) ஆகும். இது, ஓர் அரசாங்கம் பதவியேற்றவுடன் முன்னெடுக்க வேண்டிய கொள்கை ரீதியான தொலைநோக்கு, ஆளுகைசார் முன்னுரிமைகள் மற்றும் சீர்திருத்தத்துக்கான அர்ப்பணிப்புக்கள் பற்றித் தெளிவாக எடுத்துரைக்கின்றது. இந்த வாக்குறுதிகளை அளவிடத்தக்க செயற்பாடுகளாக மாற்றுதல் என்பது ஜனநாயக ரீதியிலான பொறுப்புக்கூறல், பொதுமக்களின் நம்பிக்கை மற்றும் கொள்கைசார் ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பேணுவதற்கு மிக முக்கியமானதாகும். ப.ஃவ்ரல் அமைப்பு, மார்ச் 12 இயக்கத்துடன் (M12M) இணைந்து முன்னெடுத்த இரண்டாம் அரையாண்டுகால தேர்தல் விஞ்ஞாபனக் கண்காணிப்பு செயல்முறையின் ஒருங்கிணைந்த கண்டறிதல்களை இந்தத் தொகுப்பறிக்கை முன்வைக்கின்றது. பல்தரப்பு கலந்தாலோசனைகள் (Multi-stakeholder Consultation) மூலம் உருவாக்கப்பட்ட, கட்டமைக்கப்பட்ட கண்காணிப்புச் சட்டகமொன்றை அடிப்படையாகக்கொண்டு அமைச்சரவைத் தீர்மானங்கள், நிறைவேற்றுத்துறைத் தீர்மானங்கள், பாராளுமன்றச் செயல் நடவடிக்கைகள் மற்றும் 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டம் ஆகியவற்றினூடாக கொள்கை இணக்கப்பாட்டினை இந்த அறிக்கை மதிப்பீடு செய்கின்றது. நிருவாக நிலைமாற்றங்கள், அறிக்கையிடலில் உள்ள மட்டுப்பாடுகள் மற்றும் ஆவணங்கள் கிடைப்பதில் செல்வாக்குச் செலுத்திய வரவுசெலவுத்திட்டம் தொடர்பான தாமதங்கள் ஆகியவற்றை அங்கீகரித்து, பரந்தளவிலான ஆளுகைச் சூழமைவினுள் (Governance context) நடைமுறைப்படுத்தல் சார்ந்த முன்னேற்றத்தை இவ்வறிக்கை நிலைநிறுத்துகின்றது.

தேர்தல் விஞ்ஞாபனக் கண்காணிப்புச் செயல்முறையானது, அளவுசார் (Quantitative) மற்றும் பண்புசார் (Qualitative) குறிகாட்டிகளை அடிப்படையாகக்கொண்ட கட்டம் கட்டமான, சான்று அடிப்படையிலான (Evidence-based) ஒரு முறைமையியலைக் கையாள்கிறது. முதலாம் கட்டத்தில், மதிப்பீடானது பிரதானமாக “பொருத்தப்பாடு” (Relevance) எனும் அளவுகோலில் கவனம் செலுத்தியதுடன், விஞ்ஞாபன உறுதிமொழிகளானவை பிரஜைகளின் தேவைகள் மற்றும் தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகளுடன் எந்தளவு தூரம் ஒத்திசைகின்றன என்பதையும் ஆராய்ந்தது. இக்கட்டமானது நிறைவேற்றுத்துறைத் தீர்மானங்கள், பாராளுமன்றச் செயல்நடவடிக்கைகள், அமைச்சரவைத் தீர்மானங்கள் மற்றும் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள் உட்பட முக்கிய “உள்ளீடு” (Input) மற்றும் “செயற்பாட்டு” (Activity) குறிகாட்டிகளைப் பகுப்பாய்வு செய்து, தேசியளவில் அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி மதிப்பீட்டு வழிகாட்டல்களுக்கிணங்க, அவற்றை: “உயர் பொருத்தப்பாடுடையவை” (Highly Relevant), “பொருத்தப்பாடுடையவை” (Relevant), “பகுதியளவு பொருத்தப்பாடுடையவை” (Partially Relevant) மற்றும் “பொருத்தப்பாடற்றவை” (Irrelevant) என நான்கு நிலைகளிலான தரப்படுத்தல் முறைமையின்கீழ் வகைப்படுத்தியது. இரண்டாம் கட்டமானது, “வினைத்திறன்“ (Efficiency) மற்றும் “பயனுறுதி“ (Effectiveness) ஆகிய OECD-DAC அளவுகோல்களைக் கூட்டிணைக்கும் வகையில் அதன் கட்டமைப்பை விரிவுபடுத்தியது. இது நடைமுறைப்படுத்தல் செயலாற்றுகை மற்றும் அதன் பெறுபேறுகள் குறித்த ஆழமான மதிப்பீட்டைச் சாத்தியமாக்கியது. இதில் அமைச்சுக்களின் செயற்திட்ட முன்னேற்றம் (ஆரம்பிக்கப்பட்டவை, முன்னெடுக்கப்படுபவை, பூர்த்திசெய்யப்பட்டவை), சேவை வழங்கல் மேம்பாடுகள், இயற்றப்பட்ட சட்டங்கள் மற்றும் பயனாளிகளைச் சென்றடைதல் ஆகிய விடயங்களைத் தொடர்ச்சியாகக் கண்காணிப்பதும் உள்ளடங்கியிருந்தன. ஒட்டுமொத்தமாக, இந்தக்


கட்டம் கட்டமான அணுகுமுறையானது, கொள்கை இணக்கப்பாட்டை மதிப்பீடு செய்வதிலிருந்து, காலப்போக்கில் நடைமுறைப்படுத்தலின் தரம் மற்றும் தாக்கம் என்பவற்றை மதிப்பீடு செய்தல் வரை ஒரு கட்டமைக்கப்பட்ட நிலைமாற்றத்தை உறுதிப்படுத்துகின்றது.

## 2. வளமான நாடு – அழகான வாழ்க்கை

அரசாங்கத்தின் மேலோங்கிய தொலைநோக்கானது பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவதாகும்: முழுநிறைவான வாழ்க்கை – வசதியான நாடு (சமுதாயம்), கௌரவமான வாழ்க்கை – பாதுகாப்பான நாடு (சமூகம்), நவீன வாழ்க்கை – செல்வம் கொழிக்கும் நாடு (பொருளாதாரம்) மற்றும் அபிமானமிக்க வாழ்க்கை – நிலைதளராத நாடு (ஆளுகை). இந்த நான்கு பிரதான எதிர்பார்ப்புக்களும் தேசிய முக்கிய பெறுபேற்றுத் துறைகளை (NKRAs) அடைந்துகொள்வதற்கான வழிகாட்டும் செயற்பணிகளாக அமைகின்றன (உரு 1). இந்தத் தொலைநோக்கைத் தொழிற்படுத்துவதற்காக, 39 உப தேசிய முக்கிய பெறுபேற்றுத் துறைகள் (இலக்குகள்) அடையாளம் காணப்பட்டுள்ளன என்பதுடன் அவை, பரந்துபட்ட கொள்கை இலக்குகளை அளவிடக்கூடிய பெறுபேறுகளாக மாற்றுவதற்கான ஒரு கட்டமைக்கப்பட்ட சட்டகத்தையும் வழங்குகின்றன. ஒரு விரிவான கொள்கை ஆவணம் என்றவகையில், அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனம் அபிவிருத்தி சார்ந்த 437 வாக்குறுதிகளையும், கொள்கை சார்ந்த 455 வாக்குறுதிகளையும், அபிவிருத்தி மற்றும் கொள்கை ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய 441 வாக்குறுதிகளையும் கொண்டுள்ளது (உரு 2).




உரு 1: ஒவ்வொரு செயற்பணியின் / தேசிய முக்கிய பெறுபேற்றுத் துறையின் (*NKRA*) கீழ் விளக்கப்பட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தின் செயற்பாடுகள்




உரு 2: அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்திலுள்ள வாக்குறுதிகளின் நோக்குநிலை

## 3. தேர்தல் விஞ்ஞாபனத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் முன்னெடுத்துள்ள முயற்சிகள்

- தேசிய கொள்கைக் கட்டமைப்பு: அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனம் "தேசிய கொள்கைக் கட்டமைப்பாக" அமைச்சரவையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதற்கிணங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரச நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகள் தமது பணிகளைத் திட்டமிடவும் நடைமுறைப்படுத்தவும் பணிக்கப்பட்டுள்ளன.

- செயலாற்றுகைக் கண்காணிப்புச் சுற்றறிக்கை: எல்லா அமைச்சுக்களும் தமது 2025 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டங்களை, முன்னேற்றக் கண்காணிப்புச் சட்டகம் மற்றும் 2025-2029 காலப்பகுதிக்கான மூலோபாயத் திட்டம் என்பவற்றின் அடிப்படையில் தயாரிக்குமாறு அறிவுறுத்தி, ஜனாதிபதி செயலகத்தினால் 2025.03.24 ஆந் திகதி PS/SB/Circular/03/2025 எனுமிலக்க சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

- கட்டாய அறிக்கையிடல்: எல்லா அமைச்சுக்களும் தேர்தல் விஞ்ஞாபனத்தின் உறுதிமொழிகள் உள்ளடங்கிய தமது செயற்பாட்டுத் திட்டங்களையும் மூலோபாயத் திட்டங்களையும் சமர்ப்பிக்கும்படியும், அமைச்சுக்களின் செயலாற்றுகைக் கண்காணிப்பு முறைமையினூடாக (MPMS) ஒவ்வொரு காலாண்டுக்கும் தமது முன்னேற்ற அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும்படியும் தேவைப்படுத்தப்படுகின்றன.

- நிறுவன ரீதியான பொறிமுறைகள்: அமைச்சரவை, பகிரங்க முதலீட்டுச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் பற்றிய மூலோபாய ரீதியான முடிவெடுத்தலை துரிதப்படுத்துவதற்காக 11 சிரேஷ்ட அதிகாரிகளைக்கொண்ட பகிரங்க முதலீட்டுக் கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு குழுவை 2024.12.30 ஆந் திகதி நியமித்துள்ளது.

- பெறுபேறுகளை அடிப்படையாகக்கொண்ட முகாமைத்துவம்: அரசாங்கம், செயலாற்றுகை பொறுப்புக்கூறல் மற்றும் விளைவுகளை இலக்காகக்கொண்ட நடைமுறைப்படுத்தலை வலுப்படுத்துவதற்காக, பெறுபேறுகளை அடிப்படையாகக்கொண்ட முகாமைத்துவ

(RBM) அணுகுமுறையை அறிமுகப்படுத்தும் பொருட்டு 2025 ஒக்டோபர் 7 ஆந் திகதி அமைச்சரவைத் தீர்மானத்தையும் எடுத்துள்ளது.


- பொருளாதார வளர்ச்சி இலக்கு: உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (Real GDP) 5% இற்கும் அதிகமான ஒரு நடுத்தர காலப்பகுதிக்கான பொருளாதார வளர்ச்சி வீதத்தை அடைவதை அரசாங்கம் நோக்காகக் கொண்டுள்ளது. இதற்கு உதவும் வகையில், கொள்கைசார் கலந்துரையாடல்களுக்கு வழிகாட்டவும், தேசிய பொருளாதார குறிக்கோள்களுடனான ஒத்திசைவை உறுதிப்படுத்தவும் பொருளாதார முகாமை பற்றிய விசேட குழுவொன்று தாபிக்கப்பட்டது.

- உற்பத்தித்திறன் மற்றும் 'க்ளீன் ஸ்ரீலங்கா' முன்முயற்சி: 2025/26 ஆம் ஆண்டிலிருந்து தேசிய உற்பத்தித்திறன் விருதுகளுக்கான போட்டி பாடசாலைகளையும், அரசாங்க, உற்பத்தி மற்றும் சேவைகள் சார்ந்த துறைகளையும் உள்ளடக்கி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இந்த முன்முயற்சியானது வினைத்திறன், பொறுப்புக்கூறல் மற்றும் செயலாற்றுகை ரீதியிலான பெறுபேறுகளை ஊக்குவிப்பதன் மூலம், 'க்ளீன் ஸ்ரீலங்கா' தேசிய செயற்திட்டத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்கான ஒரு மூலோபாயக் கருவியாக அமைகின்றது.

## 4. அமைச்சரவைத் தீர்மானங்களின் பொருத்தப்பாடு பற்றிய மதிப்பீடு

கட்டம்-I (2024 நவம்பர் முதல் 2025 மே வரை) மற்றும் கட்டம்-II (2025 ஜூன் முதல் டிசம்பர் வரை)

| விபரம் | கட்டம்–I | கட்டம்–II |
|---|---|---|
| மொத்த அமைச்சரவைத் தீர்மானங்கள் | 299 | 457 |
| நியதிச்சட்டத் தீர்மானங்கள் (புறநீக்கப்பட்டவை) | 65 | 27 |
| மீளாய்வுக்காக எஞ்சியுள்ள தீர்மானங்கள் | 234 | 430 |
| மேலதிக புறநீங்கல்கள் (புதிய/முந்தைய முன்மொழிவுகள்) | 18 | N/A |
| மதிப்பிடப்பட்ட மொத்தத் தீர்மானங்கள் | 216 | 430 |




உரு 3: வாக்குறுதிகளுடனான ஒத்திசைவின் பொருத்தப்பாட்டு சதவீதங்கள்

## 5. நிறைவேற்றுத்துறைத் தீர்மானங்கள்

முதலாம் கட்டத்தில் (PHASE-I), கண்காணிப்புச் செயல்முறையானது அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் ஒத்திசைந்துபோன ஒன்பது (09) நிறைவேற்றுத்துறைத் தீர்மானங்களை அடையாளம் கண்டது. இது தேர்தல் வாக்குறுதிகளை முறைசார் நிறைவேற்றுத்துறை நடவடிக்கையாக மாற்ற எடுக்கப்பட்ட ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளைப் பிரதிபலிக்கின்றது. இத்தீர்மானங்கள், நிருவாகத்தினால் அதன் முன்னுரிமைகளை நிறைவேற்றுவதில் பின்பற்றப்பட்ட ஆரம்பகாலக் கொள்கை வழிகாட்டலைச் சுட்டிக்காட்டுகின்றன.

- தர்க்கரீதியாகத் தீர்மானிக்கப்பட்ட 25 அமைச்சுக்களுக்கு 25 அமைச்சர்களையும் அவற்றுக்குரிய பிரதி அமைச்சர்களையும் நியமித்தல் மற்றும் இராஜாங்க அமைச்சர் பதவிகளை ஒழித்தல்: இந்த வாக்குறுதி சில விலக்களிப்புக்களுடன் பகுதியளவு நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனாலும் இப்போது 25 அமைச்சர்கள், 32 பிரதி அமைச்சர்கள் என மாற்றப்பட்டு வாக்குறுதி மீறப்பட்டுள்ளது.

- பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 05 ஆண்டுகளின் பின் வழங்கப்படும் ஓய்வூதியத்தை ஒழித்தல்: இந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டது.

- பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வரிவிலக்குடனான வாகன அனுமதிப்பத்திரங்களை நீக்குதல்: இந்த வாக்குறுதி பகுதியளவில் நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதுடன் சரிபார்ப்பும் அவசியமாகும்

- பாராளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்வதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் படிகளை ஒழித்தல்: இந்த வாக்குறுதி இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

- உத்தியோகபூர்வ ஜனாதிபதி இல்லங்களை ஒன்றாக மட்டுப்படுத்துதல்: இந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டது.

- ஓய்வுபெற்ற ஜனாதிபதிகளுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் வழங்கப்படும் ஓய்வூதியங்களை மற்றும் சிறப்புரிமைகளை ஒழித்தல்: இந்த வாக்குறுதி இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

- நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்தல் மற்றும் நிறைவேற்று அதிகாரங்களற்ற ஒரு ஜனாதிபதியை பாராளுமன்றத்தின் ஊடாக நியமித்தல்: இந்த வாக்குறுதி இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

- அமைச்சர்களுக்கும் பிரதி அமைச்சர்களுக்கும் அவர்களது பதவிக்காலத்தில் பயன்படுத்துவதற்காக ஒரு வாகனத்தை மாத்திரம் வழங்குதல்: மேலதிக சரிபார்ப்புகள் அவசியம்.

- உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்காக உயர்நீதிமன்றத் தீர்ப்புகள்மூலம் குற்றவாளிகளாகக் காணப்பட்ட அரசியல்வாதிகளுக்கும் அரச அதிகாரிகளுக்கும் எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்: இந்த வாக்குறுதி மீதான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# 6. பாராளுமன்ற செயல்நடவடிக்கைகள்

2024 நவம்பரில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவியேற்றது முதல், 2025 டிசம்பர் வரையான காலப்பகுதியில் பாராளுமன்றத்தினால் 26 சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. இவை தேர்தல் விஞ்ஞாபனத்தின் முக்கிய முன்னுரிமைகளுக்குரிய அம்சங்களையும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்களையும் உறுதிப்படுத்துகின்றன. இச்சட்டவாக்க நடவடிக்கைகள் முக்கிய ஆளுகைத் தளங்களில் (Governance domains) கொள்கை ரீதியான அர்ப்பணிப்புக்களை முன்னெடுப்பதற்கான அத்தியாவசிய சட்ட அடிப்படையாக அமைகின்றன. இயற்றப்பட்ட அச்சட்டங்கள் பின்வருவனவற்றை வலியுறுத்துகின்றன:

- அரசதுறை சீர்திருத்தம் - நிர்வாகச் செயற்றிறனையும் வெளிப்படைத்தன்மையையும் வலுப்படுத்துதல்.
- ஊழல்-எதிர்ப்பு நடவடிக்கைகள் - பொறுப்புக்கூறலுக்கான சட்டக் கருவிகளையும் நிறுவன ரீதியிலான இயலுமையாற்றல்களையும் அதிகரித்தல்.
- பொருளாதார மற்றும் நிதிசார் ஆளுகை - வரவுசெலவுத்திட்ட நிறைவேற்றுகை, பொருளாதார முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை ஆகியவற்றுக்கு ஆதரவளித்தல்.
- சமூகப் பாதுகாப்பு மற்றும் நலன்புரி - சமூக நல்வாழ்வுக்கான சட்டகங்களை வலுப்படுத்துதல்.
- ஒழுங்குபடுத்துகை மற்றும் நிறுவனஞ்சார் அபிவிருத்தி – சிறந்த சேவை வழங்கலுக்காக ஆளுகைக் கட்டமைப்புக்களை நவீனமயப்படுத்துதல்.

இந்த சட்டவாக்க விளைவானது, அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகளுடன் நியதிச்சட்ட சட்டகங்களை ஒருங்கமைப்பதற்கான ஒரு பரந்த முயற்சியைப் பிரதிபலிக்கிறது. அத்துடன், இது கொள்கைசார் இடையீடுகளின் வினைத்திறனான நடைமுறைப்படுத்துகைக்கும் அவற்றின் நிலைபேற்றுத்தன்மைக்கும் வசதியளிக்கின்றது.

| சட்ட இல. | தலைப்பு | சட்டமாக ஆக்கப்பட்ட திகதி | தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதி |
|---|---|---|---|
| 01/2025 | உள்ளூராட்சி அதிகாரசபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | 17.02.2025 | தற்போது காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள், ஆளுகையில் மக்கள் இணைவதற்கான வாய்ப்பை வழங்கும் வகையில் ஒரு வருட காலத்திற்குள் நடத்தப்படும். |
| 02/2025 | உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் | 20.03.2025 | • உழைக்கும்போது செலுத்தும் வரி (PAYE) திருத்தம்.<br>• தனிநபர் வருமான வரிக்கான வருடாந்த வரி விலக்கு எல்லையை 1.2 மில்லியன் ரூபாவிலிருந்து 2.4 மில்லியன் ரூபா வரை அதிகரிப்பதோடு, வரி வீதங்கள் மற்றும் வரி அடுக்குகளை நியாயமான அடிப்படையில் மீளமைத்தல். |
| 03/2025 | ஒதுக்கீட்டுச் சட்டம் | 21.03.2025 | தேசிய வரவுசெலவுத்திட்டங்களுக்கான நியதிச்சட்ட ஏற்பாடு. |
| 04/2025 | பெறுமதிசேர் வரி (திருத்தச்) சட்டம் | 09–11.04.2025 | வரி நிருவாகத்தில் வினைத்திறனை அதிகரிப்பதற்குத் தேவையான சட்ட மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளுதல். |
| 05/2025 | குற்றச் செயல்களின் வரும்படிகள் சட்டம் | 08–30.04.2025 | ஊழல் மற்றும் நிதிசார் குற்றங்களையும் வேறு கட்டமைப்பையும் தடுப்பதற்கான சட்டங்களை வலுப்படுத்துதலும் முறைப்படுத்துதலும். |

| | | | |
|---|---|---|---|
| 06/2025 | வெளிநாட்டுக் கடன்கள் (நீக்குதல்) சட்டம் | 23.05.2025 | கடன் நிலைபேற்றுத்தன்மையினைப் பேணுவதற்கும், வட்டிச் சுமையை தாங்கிக்கொள்ளக்கூடிய மட்டத்தில் வைத்திருப்பதற்குமான மாற்றுக் கடன் நிலைபேற்றுத்தன்மை பகுப்பாய்வொன்றைத் (DSA) தயாரித்தல். இது கடன் மறுசீரமைப்பு ஈடுபாடுகளின் போது, அவசியமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதை நோக்காகக் கொண்டது. |
| 07/2025 | குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் | 04–18.06.2025 | விளக்கமறியல் கைதிகளாக நீண்டகாலம் தடுத்து வைக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக, குற்றவியல் நீதி முறைமையுடன் தொடர்புடைய நிறுவனங்களின் வினைத்திறனை மேம்படுத்துதல். |
| 08/2025 | தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தச்) சட்டம் | 05–19.06.2025 | முச்சக்கர வண்டிச் சேவை, பணியாளர்கள் போக்குவரத்து மற்றும் பாடசாலை போக்குவரத்துச் சேவைகள் உள்ளிட்ட வாடகை வாகனச் சேவைகளை (Taxi Services) முறைப்படுத்துவதன் மூலம் அவற்றின் தரம் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துதல். |
| 09/2025 | வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படி (திருத்தச்) சட்டம் | 22–23.07.2025 | சம்பள முரண்பாடுகளைக் குறைப்பதற்கும் ஊழியர்களை ஊக்குவிப்பதற்கும் ஏற்றவகையிலான தேசிய சம்பளக் கட்டமைப்பொன்றை தாபித்தல். |
| 10/2025 | வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படி (திருத்தச்) சட்டம் (இரண்டாவது) | 22–23.07.2025 | சம்பள முரண்பாடுகளைக் குறைப்பதற்கும் ஊழியர்களை ஊக்குவிப்பதற்கும் ஏற்றவகையிலான தேசிய சம்பளக் கட்டமைப்பொன்றை தாபித்தல். |
| 11/2025 | வேலையாட்களின் தேசிய குறைந்தபட்ச வேதனம் (திருத்தச்) சட்டம் | 22–23.07.2025 | சம்பள முரண்பாடுகளைக் குறைப்பதற்கும் ஊழியர்களை ஊக்குவிப்பதற்கும் ஏற்றவகையிலான தேசிய சம்பளக் கட்டமைப்பொன்றை தாபித்தல். |
| 12/2025 | கம்பெனிகள் (திருத்தச்) சட்டம் | 24.07–04.08.2025 | • நிதி துஷ்பிரயோகம், இலஞ்சம் மற்றும் ஊழல் முதலிய ஊழல்சார் நடைமுறைகளைத் தடுப்பதற்கான சட்டவாக்கத்திற்கு முன்னுரிமையளித்தல்.<br>• ஊழல் மற்றும் நிதிசார் குற்றங்களையும் வேறு கட்டமைப்பையும் தடுப்பதற்கான சட்டங்களை வலுப்படுத்துதலும் முறைப்படுத்துதலும். |
| 13/2025 | நாணய மாற்றுண்டியல்கள் (திருத்தச்) சட்டம் | 07–15.08.2025 | நிதி துஷ்பிரயோகம், இலஞ்சம் மற்றும் ஊழல் முதலிய ஊழல்சார் நடைமுறைகளைத் தடுப்பதற்கான சட்டவாக்கத்திற்கு முன்னுரிமையளித்தல். |
| 14/2025 | இலங்கை மின்சார (திருத்தச்) சட்டம் | 06–18.08.2025 | போட்டித்தன்மைமிக்க கொள்வனவு நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலமும், மின்தேவைக்காக எண்ணெய் அடிப்படையிலான மின்னுற்பத்தியில் தங்கியிருப்பதைக் குறைக்கும் நோக்கில் சூரியசக்தி மற்றும் காற்றாலை மின்னுற்பத்தித் திட்டங்களுக்கு முன்னுரிமையளிப்பதன் மூலமும், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் பிராந்தியத்திலேயே மிகக்குறைந்த மின்சாரக் கட்டண நிலைக்குக் கொண்டுவரும் வகையில் மின்சாரக் கட்டணங்கள் படிப்படியாகக் குறைக்கப்படும். |
| 15/2025 | சமுர்த்தி (திருத்தச்) சட்டம் | 20–22.08.2025 | சமுர்த்தி வங்கிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கிகள் உள்ளிட்ட கூட்டுறவு வங்கி முறைமையை வலுப்படுத்துவதன்மூலம் நுண், சிறு மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கான (MSME) நிதிசார் ஆதரவை அதிகரித்தல். |
| 16/2025 | இறப்பர் கட்டுப்பாட்டு (திருத்தச்) சட்டம் | 20–22.08.2025 | தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு போன்ற பல்லாண்டுப் பயிர்களுடன் இடைப்பயிர்ச் செய்கை மற்றும் பயிர் பல்வகைப்படுத்தலை மேற்கொள்வதற்குத் தேவையான தொழில்நுட்ப, நிதி மற்றும் வேறு வசதிகளை வழங்குதல். |
| 17/2025 | பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம் | 19.08–03.09.2025 | சுற்றுலாத்துறையில் முறைசாராத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களை முறைசார் துறைக்குள் உள்வாங்குவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல். |
| 18/2025 | ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டம் | 10.09.2025 | ஓய்வுபெற்ற ஜனாதிபதிகளுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் வழங்கப்படும் ஓய்வூதியங்கள் மற்றும் விசேட சிறப்புரிமைகளை இல்லாதொழித்தல். |
| 19/2025 | தேசிய கணக்காய்வு (திருத்தச்) சட்டம் | 11–22.09.2025 | அரச துறையின் பொறுப்புக்கூறலை வலுப்படுத்துதல், ஊழலை ஒழித்தல் மற்றும் நிதிசார் ஆளுகையை அதிகரித்தல். |
| 20/2025 | தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகச் சட்டம் | 23.09–07.10.2025 | மண்சரிவு இடராபத்துக்களை முகாமை செய்தல், தேசிய கட்டிட நிர்மாண சட்டக்கோவைகளை வகுத்தல் மற்றும் அனர்த்தங்களை எதிர்கொள்ளக்கூடிய வலுவான கட்டுமானங்களை உறுதிப்படுத்துதல். |

| | | | |
|---|---|---|---|
| 21/2025 | விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டுக்கெதிரான சமவாயம் (திருத்தச்) சட்டம் | 07.10.2025 | • சட்டவிரோத போதைப்பொருள் பயன்பாடு, ஆட்ட நிர்ணயம் மற்றும் வேறு முறைகேடுகள் உள்ளிட்ட அனைத்து வகையான மோசடிகளையும் ஊழல்களையும் ஒழிப்பதற்கான பொறிமுறைகளை நிறுவுதல். அத்துடன், தற்போதுள்ள நடத்தைக்கோவைகள் மற்றும் விளையாட்டுச் சட்டங்களை இற்றைப்படுத்துதல். |
| 22/2025 | தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம் | 21–30.10.2025 | புத்தாக்கத்தை ஊக்குவிப்பதோடு, புலமைச் சொத்துரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் தரவுத் தனியுரிமை, தரவுப் பாதுகாப்பு மற்றும் இணையப் பாதுகாப்பு (Cyber Security) ஆகியவற்றை உறுதிப்படுத்துகின்ற ஒரு விரிவான சட்டச் சட்டகத்தை நடைமுறைப்படுத்துதல். |
| 23/2025 | ஒதுக்கீட்டுச் சட்டம் (இரண்டாவது) | 05.12.2025 | தேசிய வரவுசெலவுத்திட்டங்களுக்கான நியதிச்சட்ட ஏற்பாடு. |
| 24/2025 | சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு (திருத்தச்) சட்டம் | 05–17.12.2025 | வரிக் கட்டமைப்பை நெறிப்படுத்துவதனை நோக்காகக் கொண்டு, வரி விலக்களிப்புகளில் திருத்தங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் வரி செலுத்தப்படற்பாலதான சேவைகளின் நோக்கெல்லையைத் தெளிவுபடுத்துதல். |
| 25/2025 | பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம் | 05–17.12.2025 | வரி நிருவாகத்தின் வினைத்திறனை மேம்படுத்துவதற்குத் தேவையான சட்டச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல். |
| 26/2025 | செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (திருத்தச்) சட்டம் | 05–17.12.2025 | அதிகபட்ச வரி விடுமுறைக் காலப்பகுதியை 25 ஆண்டுகளில் இருந்து 10 ஆண்டுகளாகக் குறைத்தல், கண்காணிப்புப் பொறிமுறைகளை வலுப்படுத்துதல் மற்றும் செயல்நுணுக்க முதலீடுகளுக்குக் கடுமையான இணங்கியொழுகல் தேவைப்பாடுகளைக் கட்டாயமாக்குதல். |

# 7. 2025/2026 தேசிய வரவுசெலவுத்திட்டமும் முன்மொழிவுகளும்

2024 நவம்பர் முதல் 2025 மே வரையிலான வரையறுக்கப்பட்ட கண்காணிப்புக் காலத்தைக் கருத்திற் கொண்டு, கண்காணிப்பின் முதலாம் கட்டம் பிரதானமாக விளைவுளில் (Outputs) கவனம் செலுத்தியது. 2025 ஜூன் முதல் டிசம்பர் வரையிலான காலப்பகுதியை உள்ளடக்கிய இரண்டாம் கட்டமானது தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை, நடைமுறைப்படுத்தல் விளைவுகளாக (Implementation outcomes) மாற்றுவதில் அமைச்சுக்களின் செயலாற்றுகையைக் கண்காணிப்பதை நோக்காகக் கொண்டிருந்தது. இரண்டாம் கட்டத்தின் போது, தகவலறியும் உரிமைக் கோரிக்கைகள் ஊடாக சகல அமைச்சுக்களிடமிருந்தும் முன்னேற்ற அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ள கண்காணிப்புக் குழு ஆரம்பத்தில் உத்தேசித்திருந்தது. இருப்பினும், 25 அமைச்சுக்களில் 15 அமைச்சுக்களிடமிருந்து மாத்திரமே ஆவணங்கள் கிடைக்கப்பெற்றன. எவ்வாறாயினும், கிடைக்கக்கூடிய எல்லா ஆவணங்களையும் பயன்படுத்தி முடிந்தவரை கண்காணிப்பும் பகுப்பாய்வும் முன்னெடுக்கப்பட்டன. 2025 மார்ச் மாத அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம், அரசாங்கம் தேர்தல் விஞ்ஞாபனத்தை தேசிய அபிவிருத்தி கொள்கைச் சட்டகமாக முறையாக அங்கீகரித்தது. அதற்கிணங்க, தேர்தல் விஞ்ஞாபனத்தின் 1,333 உறுதிமொழிகள் 1,385 செயற்பாடுகளாக மாற்றப்பட்டு, அதன்பின்னர் 25 அமைச்சுக்களிடையே 1,474 செயற்பாடுகளாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன. பயனுறுதிமிக்க தொழிற்பாட்டுமயமாக்கலை (Effective operationalization) வசதிப்படுத்துவதற்காக, மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான செயற்பாடுகள் ஒன்றுக்கு மேற்பட்ட அமைச்சுக்களுக்கு குறித்தளிக்கப்பட்டுள்ளன. 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் 1,357 செயற்திட்டங்களும் வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்த முன்மொழியப்பட்டுள்ளன. அதற்கிணங்க, ஒவ்வோர் அமைச்சும் பின்வரும் முறையில் கண்காணிக்கப்பட்டு வருகின்றன:

A. தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகள் பற்றிய பகுப்பாய்வு.
B. நிறுவன ரீதியிலான திட்டமிடல் மற்றும் ஆவணங்களின் கிடைக்கக்கூடியதன்மை.
C. அமைச்சுக்களின் அமைச்சரவைத் தீர்மானங்கள் பற்றிய பகுப்பாய்வு.
D. அமைச்சுக்களின் வரவுசெலவுத்திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு.
E. தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள் மீதான பாராளுமன்றத்தின் செயல்நடவடிக்கைகள்.
F. தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறை.

வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகளில் பெரும் பகுதியானது (கடன் மீள்செலுத்துகை புறநீங்கலாக) மூலதனச் செலவுகளைவிடவும் (Capital expenditures) மீளுறும் செலவுகளுக்கே (Recurrent expenditures) அதிகம் செலவிடப்படுவதனை கண்காணிப்புச் செயல்முறை அடையாளம் கண்டது. இது, அமைச்சுக்கள் அபிவிருத்திசார் இடையீடுகளை (Development interventions) விடவும், தொழிற்பாட்டுமயமாக்கல் (Operationalization) குறித்தே அதிக அக்கறை காட்டுகின்றமையைச் சுட்டிக்காட்டுகின்றது.

| ஆண்டு | மொத்த ஒதுக்கீடு (ரூபா. மில்லியன்) | மீளுறும் செலவு (ரூபா. மில்லியன்) | % | மூலதனம் (ரூபா. மில்லியன்) | % |
|---|---|---|---|---|---|
| 2025 | 6,637,463 | 5,410,996 | 81.5% | 1,226,467 | 18.5% |

2025 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ள 1,600,000 மில்லியன் ரூபாயுடன், கடன் மீள்செலுத்துகையானது ஒரு பாரிய நிதிச் சுமையாக (Fiscal burden) அமைகின்றது.

| ஆண்டு | மொத்த வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு (ரூபா. மில்லியன்) | மீளுறுகை (ரூபா. மில்லியன்) | % | மூலதனம் (ரூபா. மில்லியன்) | % |
|---|---|---|---|---|---|
| 2025 | 8,835,001 | 0 | 0% | 1,600,000 | 18.1% |

2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தைப் பொறுத்தமட்டில், அதனைச் சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட ஆரம்பக்கட்ட மூன்று மாத காலதாமதமானது, ஒரு புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டதோடு தொடர்புடைய ஓர் இடைக்காலத் தடையாகக் (Transitional constraint) கருதப்படலாம். மேலும், நான்காவது காலாண்டில் ஏற்பட்ட சூறாவளி அனர்த்தத்தால் உண்டான பாதிப்புக்கள், அமைச்சுக்களின் வழமையான பணிப்பாய்வுகளையும் (workflows) நிருவாகச் செயல்முறைகளையும் கணிசமாகப் பாதித்தன. இக்காரணிகள், கால வினைத்திறன் (Time efficiency) மற்றும் நிறுவனஞ்சார் முகாமைத்துவ இயலுமையாற்றல் (Institutional management capacity) தொடர்பான கரிசனைகளைத் தோற்றுவிக்கின்றன.

# 8. முதன்மையான வேலைத்திட்டங்களும் முன்முயற்சிகளும்

## "க்ளீன் ஸ்ரீலங்கா" வேலைத்திட்டம்

"க்ளீன் ஸ்ரீலங்கா" (Clean Sri Lanka) முன்முயற்சியானது சமூகப் பொறுப்புணர்வு, சுற்றுச்சூழல் பொறுப்புடைமை மற்றும் ஒழுக்க விழுமியங்களை அடிப்படையாகக்கொண்ட ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பும் மேலோங்கிய தொலைநோக்கின்கீழ், தேர்தல் விஞ்ஞாபனத்திலுள்ள பல்வேறு தொனிப்பொருள்களை மூலோபாய ரீதியாகத் தொழிற்பாட்டுக்குக் கொண்டுவரும் ஒரு திட்டமாகும். முதலாவது ஆண்டில், இந்த முன்முயற்சி பாடசாலைகள், பொது நிறுவனங்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளுடனான ஒருங்கிணைப்பு உட்பட, கட்டமைக்கப்பட்ட நிறுவன ரீதியிலான ஒருமைப்பாட்டை நோக்கி குறியீட்டுப் பிரசாரங்களுக்கு (symbolic campaigns) அப்பால் முன்னகர்ந்தது. முதலாம் கட்டத்தில், பின்வரும் தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகள் தொடர்பில் இந்த குறிப்பிட்ட வேலைத்திட்டத்துக்கு இசைவாக அமைச்சரவைத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளமை கண்காணிக்கப்படுகின்றது.

- தற்போதுள்ள திண்மக்கழிவு முகாமைத்துவத் திட்டங்கள் மற்றும் அவை தொடர்பான கொள்கைகளை மீளாய்வு செய்து, தேசிய திண்மக்கழிவு முகாமைத்துவச் செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்.
- அவசியமான வளங்கள் மற்றும் தொழில்நுட்ப வசதிகளை வழங்குவதன் மூலம், அரசியலமைப்பின் 16 ஆவது திருத்தத்தின்கீழ் ஏற்றங்கீகரிக்கப்பட்ட தேசிய மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்.

விளைவு மட்டத்திலான (Outcome-level) சூழல் தாக்கத் தரவுகள் மட்டுப்படுத்தப்பட்டவையாக இருக்கின்ற அதேவேளை, நிறுவன ரீதியான பொறுப்புக்கூறல் பொறிமுறைகளைத் தாபித்தல் என்பது கொள்கைசார் உட்கருத்திலிருந்து கட்டமைக்கப்பட்ட நடைமுறைப்படுத்தலுக்கு நிலைமாறுவதைச் சுட்டிக்காட்டுகின்றது.

## இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு முன்வைத்த ஊழல் எதிர்ப்புச் செயற்பாட்டுத் திட்டம்

ஊழல் எதிர்ப்பு ஆளுகையை வலுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் உறுதிமொழிக்கமைவாக, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் நிறுவன ரீதியான இயலுமையாற்றலையும் சட்டச் சட்டகத்தையும் மீள வலுப்படுத்துவதில் முன்னேற்றம் அவதானிக்கப்பட்டுள்ளது. குறித்த ஆணைக்குழுவினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய தேசிய ஊழல் எதிர்ப்புச் செயற்பாட்டுத் திட்டமானது (2025-2029) உள்நாட்டு மற்றும் சர்வதேசப் பங்குதாரர்களின் பங்களிப்போடு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கான அமைச்சரவை அங்கீகாரமும் 2025 மார்ச் 03 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், சட்ட அமுலாக்கச் செயற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ள போதிலும், அதன் நீண்டகாலத் தாக்க மதிப்பீடானது குற்றத்தீர்ப்பு விகிதங்கள், சொத்துக்களை மீளப்பெறுதல் தொடர்பான பெறுபேறுகள் மற்றும் முறைமைசார் தடுப்பு மறுசீரமைப்புக்கள் ஆகியவற்றிலேயே தங்கியிருக்கும்.

## பிரஜாசக்தி

அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளவாறு, பிரஜாசக்தி எனும் முன்முயற்சியானது பங்கேற்புசார் ஆளுகை (participatory governance) மற்றும் பிரஜைகளை மையமாகக் கொண்ட அபிவிருத்தி ஆகியவற்றை பிரதிபலிக்கின்றது. தேர்தல் விஞ்ஞாபனத்தில் (பக்.39) குறிப்பிடப்பட்டுள்ளவாறு, குறைந்த வருமானம் பெறுவோருக்கான வறுமை ஒழிப்புத் திட்டமாக இது அமைகிறது. புதிய அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கிணங்க, 'வளமான நாடு - அழகான வாழ்க்கை' எனும் தொலைநோக்கை அடைந்துகொள்வதற்காக பல்துறை அணுகுமுறையுடனான ஓர் ஒருங்கிணைந்த வேலைத்திட்டமாக 'பிரஜாசக்தி' வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்த வேலைத்திட்டம் 2025 ஜூலை மாதம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இதன் நடைமுறைப்படுத்தலை மதிப்பீடு செய்வதற்கும், எதிர்கால நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கும் அரசாங்க அதிகாரிகள், மாவட்டச் செயலாளர்களுடனும் வேறு அதிகாரிகளுடனும் முன்னேற்றம் பற்றிய மீளாய்வுக் கூட்டங்களை நடத்தியுள்ளனர். கிராமிய அபிவிருத்தித் திட்டமிடலுக்கு ஆதரவளிக்கும் வகையில் புதிய டிஜிட்டல் முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதன்மூலம் சமுதாய அபிவிருத்திப் பேரவைகள் (CDCs) ஒருங்கிணைந்த திட்டங்களை வகுப்பதற்கும், செயற்திட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பதற்கும் மற்றும் தொழில்நுட்பவியலைப் பயன்படுத்தி முன்னேற்றங்களைக் கண்காணிப்பதற்கும் வழிவகுக்கப்பட்டுள்ளது.[1] ஜனாதிபதி ஊடகப் பிரிவின் தகவல்களின்படி, இந்த வேலைதிட்டத்தின்கீழ் நாடளாவிய ரீதியிலுள்ள எல்லா மாவட்டச் செயலகங்களுக்கும்,

1 https://pmd.gov.lk/news/under-the-praja-shakthi-initiative-rs-01-million-each-will-be-provided-to-district-secretariats-and-divisional-secretariats-to-enhance-their-digitalisation-capacity/#:~:text=Under%20the%20Praja%20Shakthi%20initiative,limiting%20it%20to%20Colombo%20alone.

பிரதேச செயலகங்களுக்கும் தலா 01 மில்லியன் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.[2] இத்திட்டம் இன்னும் ஆரம்பக் கட்டத்திலேயே இருந்தபோதிலும், இது பரவலாக்கப்பட்ட வழிமுறையில் முடிவெடுத்தல் (decentralized decision-making) மற்றும் உள்ளூர்மயப்படுத்தப்பட்ட பொறுப்புக்கூறல் (localized accountability) ஆகியவற்றை நோக்கிய நகர்வை வெளிப்படுத்துகின்றது. இத்திட்டத்தின் தொடர்ச்சியான வினைத்திறனானது, சேவை வழங்கல் மேம்பாடுகள் மற்றும் பிரஜைகளின் குறைதீர்க்கும் பொறிமுறைகள் தொடர்பான அளவிடக்கூடிய குறிகாட்டிகளைத் (measurable indicators) தேவைப்படுத்தும்.

### ‘முழு நாடுமே ஒன்றாக’: போதைப்பொருள் ஆபத்தை இல்லாதொழித்தல்

2025 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஆரம்பித்து வைக்கப்பட்ட அரசாங்கத்தின் ஒருங்கிணைந்த போதைப்பொருள் எதிர்ப்பு மூலோபாயம், ஒரு பாதுகாப்பான சமூகத்தை உறுதிப்படுத்துவதற்கான அதன் அர்ப்பணிப்புடன் ஒத்திசைகின்றது. இந்த முன்முயற்சியின் முன்னேற்றமானது, நிறுவனங்களுக்கிடையிலான வலுவான அமுலாக்கல் ஒருங்கிணைப்பு, விரிவுபடுத்தப்பட்ட புனர்வாழ்வு வழிகாட்டல்கள் மற்றும் பொதுமக்களிடையே தீவிரப்படுத்தப்பட்ட விழிப்புணர்வு முன்முயற்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது. ‘முழு நாடுமே ஒன்றாக’ எனும் தேசிய செயற்பணியை ஓர் அவசரமானதும் துரிதமானதுமான தேசிய வேலைத்திட்டமாக ஆரம்பிப்பதற்கும், அதற்கென ஒரு தேசிய வழிநடத்தல் குழுவை (National Steering Committee) நிறுவுவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. ஜனாதிபதியின் தலைமையின்கீழ் முன்னெடுக்கப்படும் இந்த பிரசாரமானது மாவட்ட ரீதியான ஈடுபாடு, பொதுமக்களுக்கான விழிப்புணர்வு முன்முயற்சிகள் அத்துடன் சட்ட அமுலாக்கல் மற்றும் நிருவாக அதிகாரிகளுக்கிடையிலான ஒருங்கிணைந்த செயற்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய நாடளாவிய ரீதியிலான ஓர் ஒருங்கிணைந்த அணுகுமுறையைக் கொண்டுள்ளது. இப்பிரசாரத்தின் ஒரு பகுதியாக ஜனாதிபதி மேற்கொள்ளும் மாவட்ட விஜயங்கள், உயர்மட்ட அரசியல் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதுடன், போதைப்பொருள் தடுப்பு மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களுக்கு எதிரான ஒருமித்த தேசியப் பதிலளிப்பு எனும் நோக்கத்தையும் மீள வலுப்படுத்துகின்றன.

## 9. வாக்குறுதிகளும் அடைவுகளும் – 2025

| இல. | தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதி | எடுக்கப்பட்ட நடவடிக்கை/கள் | அடைவு நிலை |
|---|---|---|---|
| 01 | தர்க்கரீதியாகத் தீர்மானிக்கப்பட்ட 25 அமைச்சுகளுக்கு 25 அமைச்சர்களையும் அவற்றுக்குரிய பிரதி அமைச்சர்களையும் நியமித்தல் மற்றும் இராஜாங்க அமைச்சர் பதவிகளை ஒழித்தல் | அமைச்சரவையை 25 அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்குள் வரையறுப்பதாக வழங்கப்பட்ட உறுதிமொழி நிறைவேற்றுத்துறையின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கை 22 ஆகவும், பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை 28 ஆகவும் காணப்பட்டது.<br>அமைச்சர்களின் எண்ணிக்கை 25 ஆகவும், பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை 32 ஆகவும் அதிகரிக்கப்பட்டதன் மூலம் அந்த உறுதிமொழிகள் மீறப்பட்டுள்ளன. | நடைமுறைப்படுத்தப்பட்டது.<br>பின்னர் மீறப்பட்டது. |
| 02 | பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 05 ஆண்டுகளின் பின்னர் வழங்கப்படும் ஓய்வூதிய முறையை ஒழித்தல் | (அறிக்கையிடல் காலப்பகுதியில்) அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டதுடன், ஓய்வூதியத்தை நீக்குவதற்கான சட்டமும் இயற்றப்பட்டது (கண்காணிப்பு காலப்பகுதிக்கு அப்பால்). | நடைமுறைப்படுத்தப்பட்டது. |
| 03 | பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வரிவிலக்குடனான வாகன அனுமதிப்பத்திரங்களை நீக்குதல் | பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் புதிய வாகன அனுமதிப்பத்திரங்கள் எவையும் வழங்கப்படவில்லை, இருப்பினும் அவர்கள் வாகனங்களைப் பயன்படுத்தும் பொறிமுறை தெளிவற்றதாகவே உள்ளது. மேலும், 2026 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டம் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோருக்கான வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான நிதியை ஒதுக்கியுள்ளது. | பகுதியளவில் நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதுடன் சரிபார்ப்பு அவசியமாகும் |
| 04 | பாராளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்வதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் படிகளை ஒழித்தல். | இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை |
| 05 | உத்தியோகபூர்வ ஜனாதிபதி இல்லங்களை ஒன்றாக மட்டுப்படுத்துதல் | 2025 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமானது முன்னாள் இலங்கை ஜனாதிபதிகளுக்காக அரசினால் வழங்கப்படும் உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் பெரும்பாலான வேறு வரப்பிரசாதங்களை ஒழிக்கிறது. | நடைமுறைப்படுத்தப்பட்டது. |
| 06 | டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பிரதேச செயலக அலுவலகங்களைப் பல்வகை சேவை வழங்கும் மையங்களாக நிறுவுதல் | மூன்று புதிய டிஜிட்டல் முன்முயற்சிகள 2025 பெப்ரவரி 7 ஆந் திகதி அறிமுகப்படுத்தப்பட்டன. | ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

2 https://pmd.gov.lk/news/under-the-praja-shakthi-initiative-rs-01-million-each-will-be-provided-to-district-secretariats-and-divisional-secretariats-to-enhance-their-digitalisation-capacity/#:~:text=Under%20the%20Praja%20Shakthi%20initiative,limiting%20it%20to%20Colombo%20alone.

| | | | |
|---|---|---|---|
| 07 | நீதி முறைமையில் நிலவும் தாமதங்களை ஒழிப்பதற்கான ஒரு பொறிமுறையாக பகிரங்க குற்றவவழக்குத் தொடுப்பு பணிப்பகத்தை (DPP) அறிமுகப்படுத்துதல் மற்றும் அரசாங்கத்தின் சார்பில் வழக்குகளை நடத்துவதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து சுயாதீனமாக இயங்கும் வகையில் ஒரு பிரதான அலுவலகத்தையும் மாகாணங்களில் அதன் கிளை அலுவலகங்களையும் நிறுவுதல். | நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு இதற்கான திட்டங்களை அறிவித்துள்ளதுடன் அமைச்சரவை அங்கீகாரமும் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், இது இன்னும் நிறுவப்படவில்லை. | ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| 08 | ஓய்வுபெற்ற ஜனாதிபதிகளுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் வழங்கப்படும் ஓய்வூதியங்கள் மற்றும் சிறப்புரிமைகளை ஒழித்தல். | முன்னாள் ஜனாதிபதிகளின் சொந்த ஓய்வூதியங்கள் மாற்றமின்றி அவ்வாறே உள்ளன. அரசியலமைப்பின் 36(2) ஆம் உறுப்புரையின் ஊடாக இவை பாதுகாக்கப்படுவதுடன், அவற்றில் மாற்றங்களைச் செய்வதற்கு ஓர் அரசியலமைப்புத் திருத்தம் அவசியமாகும். | இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை |
| 09 | நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்தல் மற்றும் நிறைவேற்று அதிகாரங்களற்ற ஒரு ஜனாதிபதியை பாராளுமன்றத்தின் ஊடாக நியமித்தல். | இதுவே கடைசி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையாக இருக்கும் என்பதை அரசாங்கம் நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பகிரங்கமாக வலியுறுத்தியுள்ளது. இருப்பினும், அதனை ஒழிப்பதற்கான உத்தியோகபூர்வ காலக்கெடு இன்னும் அறிவிக்கப்படவில்லை. | இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை |
| 10 | அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கு அவர்களது பதவிக்காலத்தில் பயன்படுத்துவதற்காக ஒரு வாகனத்தை மாத்திரம் வழங்குதல் | இது குறித்த எவ்வித இற்றைப்படுத்தல்களும்/தகவல்களும் பகிரங்கமாகக் கிடைக்கவில்லை. அனைத்து 25 அமைச்சுக்களுக்கும் தகவலறியும் உரிமை விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், 13 அமைச்சுக்கள் மாத்திரமே அவற்றுக்குப் பதிலளித்துள்ளன. | மேலதிக சரிபார்ப்புகள் அவசியம். |
| 11 | 2019-04-21 ஆந் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு இணங்க, சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளுக்கு எதிராக உடனடி சட்ட நடவடிக்கை எடுத்தல் | ஜனாதிபதியின் கட்டளையின் பேரில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு, நீதிமன்றங்களில் விசாரணைகளை துரிதப்படுத்துவதற்காக நாளாந்த கேட்புக்கள் (hearings) முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. | ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| 12 | ஊழல் மற்றும் நிதிசார் குற்றங்களையும் வேறு கட்டமைப்பையும் தடுப்பதற்கான சட்டங்களை வலுப்படுத்துதலும் முறைப்படுத்துதலும். | 2025 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க குற்றச் செயல்களின் வருமபடிகள் சட்டம், 2025 ஏப்ரல் 30 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சான்றுப்படுத்தப்பட்டது. | நடைமுறைப்படுத்தப்பட்டது. |
| 13 | வரி நிருவாகத்தில் வினைத்திறனை அதிகரிப்பதற்குத் தேவையான சட்ட மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளுதல் | அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டம் திருத்தப்பட்டதுடன், 2025 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சட்டம் 2025 ஏப்ரல் 11 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சான்றுப்படுத்தப்பட்டது. | நடைமுறைப்படுத்தப்பட்டது. |
| 14 | தனிநபர் வருமான வரிக்கான வருடாந்த வரி விலக்கு எல்லையை 1.2 மில்லியன் ரூபாவிலிருந்து 2.4 மில்லியன் ரூபா வரை அதிகரிப்பதோடு, வரி வீதங்கள் மற்றும் வரி அடுக்குகளை நியாயமான அடிப்படையில் மீளமைத்தல் | அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. 2025 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்கத் உண்ணாட்டரசிறைச் சட்டம் 2025 மார்ச் 20 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சான்றுப்படுத்தப்பட்டது. 2.4 மில்லியன் ரூபா வாக்குறுதியளிக்கப்பட்ட போதிலும், திருத்தப்பட்ட அளவு 1.8 மில்லியன் ரூபா ஆகும். | பகுதியளவில் நடைமுறைப்படுத்தப்பட்டது. |
| 15 | தற்போது காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள், ஆளுகையில் மக்கள் இணைவதற்கான வாய்ப்பை வழங்கும் வகையில் ஒரு வருட காலத்திற்குள் நடத்தப்படும் | 2025 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகாரசபைத் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் 2025 பெப்ரவரி 17 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சான்றுப்படுத்தப்பட்டது. உள்ளூராட்சி அதிகாரசபைத் தேர்தல்கள் 2025 மே மாதத்தில் நடாத்தப்பட்டன. உள்ளூராட்சி அதிகாரசபைத் தேர்தல்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்ட போதிலும், ஒரு வருட காலத்திற்குள் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்னும் எதிர்பார்க்கப்படுகின்றது. மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்காக வரவுசெலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், தேர்தல் முறைமைகள் மற்றும் எல்லை நிர்ணயம் குறித்து கலந்துரையாடுவதற்காக குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. | பகுதியளவில் நடைமுறைப்படுத்தப்பட்டது. |
| 16 | ஊடகத்துறையின் செயற்பாடுகள் சிறந்த முறையில் அமைவதை மேற்பார்வை செய்வதற்கு ஒரு சுயாதீன ஊடக ஆணைக்குழுவை நிறுவுதல் | இலங்கை பட்டய ஊடகத் தொழில்வாண்மையாளர் நிறுவகத்தை (Chartered Institute of Media Professionals of Sri Lanka) நிறுவுவதற்கான சட்டமூலத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. ஊடகவியலைக் கண்காணிப்பதற்கும், ஒழுங்குபடுத்துகை மற்றும் பொறுப்புக்கூறலில் கவனம் செலுத்துவதற்குமான ஒரு சுயாதீன ஊடக ஆணைக்குழுவை அமைக்குமாறு விஞ்ஞாபனம் கோருகின்றது. எனினும், பட்டய ஊடகத் தொழில்வாண்மையாளர் நிறுவகம் என்பது ஊடகவியலாளர்களை அங்கீகரிப்பதையும் தரப்படுத்துவதையும் நோக்காகக் கொண்ட ஒரு தொழில்வாண்மைசார் அமைப்பாகும். | மேலதிக சரிபார்ப்புகள் அவசியம். |

| | | | |
|---|---|---|---|
| 17 | போட்டித்தன்மைமிக்க கொள்வனவு நடைமுறைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலமும், மின்தேவைக்காக எண்ணெய் அடிப்படையிலான மின்னுற்பத்தியில் தங்கியிருப்பதைக் குறைக்கும் நோக்கில் சூரியசக்தி மற்றும் காற்றாலை மின்னுற்பத்தித் திட்டங்களுக்கு முன்னுரிமையளிப்பதன் மூலமும், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் பிராந்தியத்திலேயே மிகக்குறைந்த மின்சாரக் கட்டண நிலைக்குக் கொண்டுவரும் வகையில் மின்சாரக் கட்டணங்கள் படிப்படியாகக் குறைக்கப்படும் | 2025 ஆகஸ்ட் 15 ஆந் திகதி இலங்கை மின்சார (திருத்தச்) சட்டம் பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்பட்டது. இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்பதற்கான பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும், 2025 ஜுன் 12 ஆந் திகதி பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதன் பிரகாரம் மின் கட்டணங்கள் 15% இனால் அதிகரிக்கப்பட்டன. | இன்னும் நடைமுறைப்ப டுத்தப்படவில்லை |
| 18 | முச்சக்கர வண்டிச் சேவை, பணியாளர்கள் போக்குவரத்து மற்றும் பாடசாலை போக்குவரத்துச் சேவைகள் உள்ளிட்ட வாடகை வாகனச் சேவைகளை (Taxi Services) முறைப்படுத்துவதன் மூலம் அவற்றின் தரம் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துதல் | 2025 ஜுன் 19 ஆந் திகதி தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தச்) சட்டம் பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்பட்டது. | நடைமுறைப்ப டுத்தப்பட்டது. |
| 19 | விளக்கமறியல் கைதிகளாக நீண்டகாலம் தடுத்து வைக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக, குற்றவியல் நீதி முறைமையுடன் தொடர்புடைய நிறுவனங்களின் வினைத்திறனை மேம்படுத்துதல் | 2025 ஜுன் 18 ஆந் திகதி குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்பட்டது. | நடைமுறைப்ப டுத்தப்பட்டது. |
| 20 | புத்தாக்கத்தை ஊக்குவிப்பதோடு, புலமைச் சொத்துரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் தரவுத் தனியுரிமை, தரவுப் பாதுகாப்பு மற்றும் இணையப் பாதுகாப்பு (Cyber Security) ஆகியவற்றை உறுதிப்படுத்துகின்ற ஒரு விரிவான சட்டச் சட்டகத்தை நடைமுறைப்படுத்துதல் | 2025 ஒக்டோபர் 30 ஆந் திகதி தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டம் பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்பட்டது. | நடைமுறைப்ப டுத்தப்பட்டது |
| 21 | அரசாங்கத்தின் இடையீட்டின் ஊடாக, கொழும்பிலுள்ள குறைந்த வருமானம் பெறும் குடியிருப்புகளில் வசிப்போருக்கு கட்டுப்படியாகும் விலையில் வீடமைப்பு வசதிகளை வழங்குவதனை வசதிப்படுத்துதல் | குறைந்த வருமானமுடையோருக்காக சீன அரசாங்கத்தின் உதவித் திட்டத்தின்கீழ் 1,996 வீடமைப்பு அலகுகளை நிர்மாணித்தல். (2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டம்) | ஆரம்பிக்கப்ப ட்டுள்ளது. |
| 22 | பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளுக்கு வரி நிவாரணம், நிதி உதவி மற்றும் வேறு அத்தியாவசிய வளங்களை வழங்குவதன் மூலம் மாதவிடாய்க்கால வறுமையை (Period poverty) ஒழித்தல். | 80,000 பாடசாலை மாணவிகளுக்கு சுகாதாரப் பாவனைக்கான மாதவிடாய்க்கால அணையாடைகளை (Sanitary Napkins) வழங்குவதற்காக தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் 1,440 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. | நடைமுறைப்ப டுத்தப்பட்டது. |
| 23 | கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகளை நீக்குவதன் மூலம், 2024 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தைத் திருத்துதல். | குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.<br><br>நிகழ்நிலை காப்புச் சட்டத்தை நீக்குவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவினால் தனிநபர் சட்டமூலமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. (2025 ஏப்ரல் மாதத்தில்)<br><br>நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணவினால் தனிநபர் சட்டமூலமொன்று சமர்ப்பிக்கப்பட்டது. (2026 பெப்ரவரி மாதத்தில்) | ஆரம்பிக்கப்ப ட்டுள்ளது. |
| 24 | சிரேஷ்ட பிரஜைகளின் நிலையான வைப்புகளுக்கு, சாதாரண வங்கி வட்டி வீதங்களை விட 5% அதிக வட்டி வீதத்தை வழங்குதல். | 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் 25,000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.<br>சிரேஷ்ட பிரஜைகளுக்கான விசேட நிலையான வைப்புத் திட்டத்தை 3% மேலதிக வட்டியுடன் நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.<br>எனினும், 5% மேலதிக வட்டி வழங்கப்படும் என வாக்குறுதியளிக்கப்பட்டிருந்தது. | பகுதியளவில் நடைமுறைப்ப டுத்தப்பட்டது. |
| 25 | சம்பள முரண்பாடுகளைக் குறைக்கும் மற்றும் ஊழியர்களை ஊக்குவிக்கும் வகையிலான ஒரு தேசிய சம்பளக் கட்டமைப்பை நிறுவுதல். | 2025 ஜுலை 23 ஆம் திகதி வேலையாட்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டம் சட்டமாக்கப்பட்டது.<br>இச்செயற்பாட்டைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, 2005 மற்றும் 2016 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டங்களின் ஊடாக வரவுசெலவுத்திட்ட படிகள் வழங்கப்பட்டிருந்த 2025 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படி (திருத்தச்) சட்டம் மற்றும் 2025 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படி (திருத்தச்) சட்டம் ஆகியன நீக்கப்பட்டன. | நடைமுறைப்ப டுத்தப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 26 | வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப, மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரித்தல். | 2026 ஜனவரி முதல் அன்றாட வேதனத்தை 400 ரூபாவினால் அதிகரிப்பதற்காக அரசாங்கத்திற்கும் பிராந்திய பெருந்தோட்ட கம்பெனிகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டதுடன், அதற்கான அமைச்சரவை அங்கீகாரமும் வழங்கப்பட்டது. | ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| 27 | டிஜிட்டல் மயமாக்கல், செயலாற்றுகை முகாமைத்துவம் மற்றும் பிரஜைகளின் ஈடுபாடு ஆகிய எண்ணக்கருக்களைக் கருத்திற்கொண்டு, தற்போதுள்ள அரச முகாமைத்துவச் செயற்பாடுகளைப் புதிய அரச முகாமைத்துவ முறைமைகளை நோக்கி நிலைமாற்றுதல். | இலங்கை மத்திய வங்கியின் புதியதோர் ஊழியர் சேமலாப நிதிய முகாமைத்துவ முறைமையை நடைமுறைப்படுத்துவதற்காக ஒரு முறைமை ஒருங்கிணைப்பாளரை (System Integrator) தெரிவுசெய்வதற்குரிய கொள்வனவுச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. | ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| 28 | சிறியளவிலான விவசாயிகள், தொழில்முயற்சியாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு நிதி வசதிகளை வழங்குவதற்காக கூட்டுறவு வங்கிகள், சமுர்த்தி வங்கிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கிகளை வினைத்திறனான முறையில் வழிப்படுத்துதல். | 2025 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த வேலைத்திட்டமாக “Sarusara” எனும் வட்டி மானியத் திட்டமான, “புதிய விரிவான கிராமிய கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன், இதற்காக 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் 5,503 மில்லியன் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. | மேலதிக சரிபார்ப்புகள் அவசியம். |
| 29 | ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவுக்குக் கிடைக்கும் முறைப்பாடுகளை ஆறு (06) மாதங்களுக்குள் புலனாய்வு செய்தல் அல்லது அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாத முறைப்பாடுகள் குறித்து ஒவ்வோர் ஆறு (06) மாதங்களுக்கும் பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தல். | இற்றைப்படுத்தல்கள் / தகவல்கள் எவையும் பகிரங்கமாகக் கிடைக்கவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரசபைகளுக்கும் நிறுவனங்களுக்கும் தகவலறியும் உரிமை விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், அவற்றுக்கான பதில்கள் எவையும் கிடைக்கப்பெறவில்லை. | மேலதிக சரிபார்ப்புகள் அவசியம். |
| 30 | அவசியமான வளங்களையும் தொழில்நுட்ப வசதிகளையும் வழங்குவதன் மூலம், அரசியலமைப்பின் 16 ஆவது திருத்தத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல். | டித்வா சூறாவளி அனர்த்தத்தின் போது விடுக்கப்பட்ட அறிவிப்புக்கள் தொடர்பாகத் தொடர்ச்சியான முறைப்பாடுகள் நிலவி வருகின்றன. | மேலதிக சரிபார்ப்புகள் அவசியம். |
| 31 | பயங்கரவாதத் தடைச் சட்டம் (PTA) உட்பட, அடக்குமுறையான எல்லாச் சட்டங்களையும் ஒழித்து, நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் மக்களின் குடியியல் உரிமைகளை உறுதிப்படுத்துதல். | பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்குப் பதிலாக, “பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாத்தல்” எனும் தலைப்பிலான புதிய சட்டமொன்றை அரசாங்கம் முன்மொழிந்துள்ளதுடன், இது தொடர்பாகப் பொதுமக்களின் கருத்துக்களையும் கோரியுள்ளது. இருப்பினும், இது குறித்த தெளிவற்ற நிலை காணப்படுகின்றது. | ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| 32 | அடையாளம் காணப்பட்ட வளர்திறன் ஆற்றல்களுக்கு (growth potentials) ஏற்ப புதிய கைத்தொழில் வலயங்களை நிறுவுதல், புத்தாக்கங்களைப் போற்றிக்காத்தல் மற்றும் கைத்தொழில் பல்வகைப்படுத்தலை மேம்படுத்துதல். | புதிய பொருளாதார வலயங்கள் (வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு) – 2025 முதல் 2030 வரை தேர்தல் விஞ்ஞாபனக் காலப்பகுதிக்காக அணுகு வீதிகள் அமைத்தல், நீர்வழங்கல் மற்றும் மின்சார விநியோகம் உள்ளிட்ட ஆரம்பக்கட்ட உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின்கீழ் 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. | ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| 33 | யுத்தத்தினால் விதவையானவர்கள், உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மனவடுக்களுக்கு (Trauma) உள்ளாகி நிவாரணமும் தங்குமிட வசதிகளும் தேவைப்படுபவர்களுக்கு நிவாரணங்களை வழங்குதல். | யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான மீள்குடியேற்றம் / நிரந்தர வீடுகள் வழங்கும் செயற்திட்டம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சின்கீழ் 2027 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்காக 2025 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் 3,500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | நடைமுறைப்படுத்தப்பட்டது. |
| 34 | வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப, மஹாபொல மற்றும் வேறு புலமைப்பரிசில் கொடுப்பனவுகளை (bursaries) அதிகரித்தல். | சுமார் 103,000 பல்கலைக்கழக மாணவர்களுக்கு மஹாபொல மற்றும் புலமைப்பரிசில் கொடுப்பனவுகளை (Bursary) உரிய நேரத்தில் வழங்குவதற்காக, 2025 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் 4,600 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | நடைமுறைப்படுத்தப்பட்டது. |
| 35 | குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 10,000 ரூபா முதல் அதற்கு மேற்பட்ட குறைந்தபட்ச மாதாந்த நிதி உதவியொன்றை வழங்குதல். | நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின்கீழ், ‘அஸ்வெசும’ பயனாளிகளுக்கு (முதலாம் காலாண்டில் 2.05 மில்லியன் குடும்பங்கள் மற்றும் இரண்டாம் காலாண்டிலிருந்து தொடர்ச்சியாக 1.8 மில்லியன் குடும்பங்கள்) பண மானியங்களை வழங்குவதற்காக, 2025 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் 160,156 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| 36 | நாட்டிற்குள்ளேயும் நாட்டிற்கு வெளியேயும் வசிக்கும் புலம்பெயர்ந்தோரின் வாக்களிக்கும் உரிமையைப் பாதுகாப்பதற்கான தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழி. | வெளிநாடுகளில் வசிக்கும் பிரஜைகளின் வாக்குரிமையைப் பாதுகாப்பதற்காக, தற்போதுள்ள சட்டங்களைத் திருத்துதல் அல்லது புதிய சட்டங்களை உருவாக்குதல் தொடர்பான விடயங்களை ஆராய்வதற்கான குழு. | மேலதிக சரிபார்ப்புகள் அவசியம். |

| | | | |
|---|---|---|---|
| 37 | ஒவ்வோர் அமைச்சுக்கும் அந்தந்தத் துறைசார்ந்த நிபுணர்களைக் கொண்ட ஓர் ஆலோசனைச் சபையை நியமித்தல் | இற்றைப்படுத்தல்கள் / தகவல்கள் எவையும் பகிரங்கமாகக் கிடைக்கவில்லை. 25 அமைச்சுக்களுக்குத் தகவலறியும் உரிமை விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், அவற்றுள் 16 அமைச்சுக்கள் மாத்திரமே பதிலளித்துள்ளன. | நடைமுறைப்படுத்தப்பட்டது. |
| 38 | நாட்பட்ட நோய்களினால் (Chronic illness) பாதிக்கப்பட்டவர்களுக்கு, தேவைப்பாட்டின் அடிப்படையில், மாதாந்தம் குறைந்தபட்சம் 10,000 ரூபா நிதி உதவியை வழங்குதல். | மாற்றுத்திறனாளிகளுக்கான கொடுப்பனவு, இனங்காணப்படாத காரணிகளினால் ஏற்படும் நாட்பட்ட சிறுநீரக நோயினால் (CKDU) பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கான கொடுப்பனவு மற்றும் முதியோர்களுக்கான கொடுப்பனவு ஆகியவற்றை வழங்கும் காலப்பகுதியை 2025 டிசம்பர் 31 ஆம் திகதி வரை நீடிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன், இதற்கான நிதி 2025 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | நடைமுறைப்படுத்தப்பட்டது. |
| 39 | நிதி நெருக்கடிகளை எதிர்கொள்ளும் முதியோர்களுக்கு நிதி உதவியை வழங்குதல். | 'அஸ்வெசும' நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டத்தின் II ஆம் அட்டவணையின்கீழான கொடுப்பனவை 7,500 ரூபாவிலிருந்து 10,000 ரூபாவாகவும், முதியோர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவை 3,000 ரூபாவிலிருந்து 5,000 ரூபாவாகவும் 2025 ஏப்ரல் மாதம் முதல் அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன், இதற்கான நிதி 2025 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | நடைமுறைப்படுத்தப்பட்டது. |
| 40 | குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்தம் 10,000 ரூபா நிதியுதவியை வழங்குதல். | 'அஸ்வெசும' நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படுகின்ற மாதாந்தக் கொடுப்பனவை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன், இதற்கான நிதி 2025 ஆம் ஆண்டு தேசிய வரவுசெலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | நடைமுறைப்படுத்தப்பட்டது. |

## டித்வா சூறாவளிச் சூழல்

அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக பிரத்தியேகமான தொனிப்பொருள் பகுதி எதுவும் உள்ளடக்கப்படவில்லை. எவ்வாறாயினும், குறித்த விஞ்ஞாபனத்தின் பல்வேறு தொனிப்பொருள் பகுதிகளுக்குள் அனர்த்தங்கள் தொடர்பான 13 உறுதிமொழிகள் உள்வாங்கப்பட்டுள்ளன. தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் குறித்த தேர்தல் விஞ்ஞாபனம் ஒரு தேசிய கொள்கைச் சட்டகமாக அங்கீகரிக்கப்பட்ட பின்னர், அனர்த்தங்கள் தொடர்பான 10 உறுதிமொழிகள் ஒரு தனியான தொனிப்பொருள் பகுதியின்கீழ் ஒருங்கிணைக்கப்பட்டன. டித்வா சூறாவளிக்குப் பின்னரான சூழலில், அனர்த்த முகாமைத்துவம் அரசாங்கத்தின் கொள்கை நடைமுறைப்படுத்தலில், அதிலும் குறிப்பாக மீட்பு, நிவாரணம் மற்றும் மீள்நிர்மாணம் ஆகியவற்றுடன், தொடர்புடைய ஒரு முக்கிய அங்கமாக மாறியுள்ளது.

அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கொள்கை நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, 2026 ஆம் ஆண்டுக்கான ஒரு குறைநிரப்பு செலவுமதிப்பீட்டிற்கூடாக (Supplementary Estimate) நிதிசார் கடப்பாடுகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. டித்வா சூறாவளியினால் ஏற்பட்ட பேரழிவைத் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் மீட்புப் பணிகளுக்கு நிதியளிப்பதற்காக, 500 பில்லியன் இலங்கை ரூபா பெறுமதியான (சுமார் 1.6 பில்லியன் அமெரிக்க டொலர்) ஒரு குறைநிரப்பு ஒதுக்கீட்டிற்கு 2025 டிசம்பர் 19 ஆந் திகதி இலங்கை பாராளுமன்றம் அங்கீகாரமளித்தது. தேர்தல் விஞ்ஞாபன உறுதிமொழிகள், புதிதாக ஏற்புச்செய்யப்பட்ட கொள்கை நடவடிக்கைகள், அவசரகால வர்த்தமானிகள், திறைசேரி சுற்றறிக்கைகள், அமைச்சரவைத் தீர்மானங்கள் மற்றும் "இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் நிதியம்" (Rebuilding Sri Lanka Fund) ஊடாகத் திரட்டப்பட்ட நிதிகள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பானது, அனர்த்த முகாமைத்துவம் மற்றும் மீட்பு முயற்சிகளைக் கண்காணிப்பதற்கான மேலதிகமானதும் சமாந்தரமானதுமான பொறிமுறை ஒன்றை உருவாக்கியுள்ளது.

அரசாங்கம் 2029 ஆம் ஆண்டு வரை தேர்தல் மூலமான பணிப்பாணையைப் பெற்றுள்ள நிலையில், தேர்தல் விஞ்ஞாபனத்தின் நடைமுறைப்படுத்தலை தொடர்ச்சியாகவும் முறைமைப்படுத்தப்பட்ட முறையிலும் கண்காணிப்பது இன்றியமையாததாகும். இத்தகைய தொடர்ச்சியான மேற்பார்வையானது பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதுடன், அதன் முன்னேற்றத்தைக் கண்டறியவும் அத்துடன் கொள்கைசார் உறுதிமொழிகள் பிரஜைகளுக்கு எந்தளவுக்கு நடைமுறைப் பயன்களாக மாற்றமடைந்துள்ளன என்பதை மதிப்பீடு செய்யவும் உதவுவதாக அமையும்.

PAFFREL
මාර්තු
மார்ச்
MARCH MOVEMENT
12
March 12 Movement

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு (பஃவ்ரல் அமைப்பு)

மார்ச் 12 இயக்கம்

இல. 16, பயர்ட் பிளேஸ், பாமன்கட குறுக்கு வீதி, கொழும்பு 06

+94 11 255 8570/71

paffrel@sltnet.lk

Scan to view Full Report